மாகாண கல்வித் திணைக்களம் - வாராந்தப் பாடசாலை

பாடம்: சித்திரம்

வாரம் - 6

தரம்: 06


ஆக்கம்: ஆசிரியை S.கற்பகம்
கே/ கோலிந்தா தமிழ் கனிஷ்ட வித்தியாலயம்



Department of Education, Sabaragamuwa Province/ Weekly School


# தலைப்பு :- 01. ரமழான் பண்டிகை
# 02. நத்தார் பண்டிகை




- ரமழான் பண்டிகை (ஈதுல் ஃபித்ர் - ஈகைத் திருநாள்) இஸ்லாமியர்களின் முக்கியமான ஒரு பண்டிகையாகும்.
- இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமாகிய ரமழான் மாதத்தில் இளம்பிறை காட்சியளித்தது தொடக்கம் பத்தாம் மாதமாகிய ஷவ்வால் மாதத்தின் இளம்பிறை காட்சியளிப்பது வரையிலான 29 அல்லது 30 நாட்களில் பகற் காலத்தில் உபவாசம் செய்து முடித்து (நோன்பிருந்து) ஷவ்வால் மாதம் முதலாம் நாளிலேயே இப்பண்டிகை கொண்டாடப்படும்.
- ரமழான் உபவாச காலத்தில் உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் அதிக பக்தி சிரத்தையுடன் மாதம் முழுவதும் நோன்பிருப்பர்.
- உபவாசம், நோன்பு என்பது அரபு மொழியில் "ஸவ்ம்" எனப்படும்.
- உபவாசத்தின்போது, அதிகாலைத் தொழுகைக்குரிய நேரம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்னரிலிருந்து சூரியன் மறையும் வரையிலான காலத்தில் உண்ணாமலும் பருகாமலும், நோன்பை முறிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யாமலும் இருப்பது அவசியமாகும்.
- நோன்பிருக்கும் காலத்தில் பசியின் தாக்கம் உணரப்படுகின்றமையால் வறியோருக்கு உதவும் மனப்பாங்கு விருத்தியும் எனவே அவ்வாறானோருக்கு உதவ முன்வருவர்.
- இக்காலத்தில் முஸ்லிம்கள் அதிக தானம் செய்வர். இது அரபியில் "ஸதகா" எனப்படும். இது தவிர பொதுவாக வசதிபடைத்தோர் தமது கட்டாயக் கடமையான ஸகாத் வரியையும் இக்காலத்தில் கணக்கிட்டு வழங்குவதுமுண்டு.
- நோன்பிருப்பதால் மனதைக் கட்டுப்படுத்தி வாழும் பயிற்சியும் கிடைக்கும் பொறுமையுடன் வாழும் தன்மையும் விருத்தியடையும். கூடவே நற்பண்புகளும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் விருத்தியடையும்.
- பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வயதுடைய சித்த சுயாதீனமுள்ள முஸ்லிம்களான ஆண் பெண் இருபாலார் மீதும் நோன்பிருப்பது கட்டாயக் கடமையாகும். நோயாளிகள், வயோதிபர்கள், கர்ப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் போன்றோருக்கு விதிவிலக்கு உண்டு.
- முஸ்லிம்கள் நோன்பிருக்கும் காலத்தில் பகலிலும் குறிப்பாக இரவிலும் அதிகமதிகமாக தொழுகை, குர்ஆன் ஓதுதல் போன்ற வணக்கங்களில் ஈடுவர். அதன் மூலம் அதிகமதிகமாக நன்மைகளைப் பெறலாம் என்பது அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையாகும்.
- நோன்பு மாதம் முடிபாதவாறு அடுத்த மாதம் தலைப்பிறை வானில் தென்பட்ட மறுநாள் காலையில் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகையில் ஈடுவது முஸ்லிம்களின் பிரதானமான செயல்களுள் ஒன்றாகும்.
- ரமழான் பெருநாள் தினத்தன்று ஸகாத்துல் பித்ரா எனும் கொடுப்பது அவசியமாகும். தமது குடும்பத்தில் உள்ள உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு கிலோகிராம் அரிசி வீதம் கணக்கிட்டு அவ்வரிசியை ஏழைகளுக்குக் கொடுத்தல் ஸகாத்துல் பித்ரா எனப்படும். இதனை




- நத்தார் எனும் போர்த்துக்கேய மொழிச் சொல்லிலிருந்து திரிந்த நத்தார் எனும் பதம் பிறப்பு எனப் பொருள்படும்.
- இலத்தீன் மொழியில் நத்தாலிஸ் எனும் பதத்தின் பொருள் பிறப்பு என்பதாகும்.
- உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவர்கள் இயேசுவின் பிறந்ததினத்தை நத்தார் எனக் கொண்டாடுகின்றனர்.
- இயேசு மனிதப்பிறவியெடுத்த தேவ புத்திரன் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.
- இயேசு பிரான் மனிதப் பிறவியெடுத்துப் பிறந்த தினமே நத்தார் எனக் கொண்டாடப்படுகின்றது.
- இயேசு பிரான் சமாதானத்தின் குமாரன் எனவும் அழைக்கப்படுகின்றார்.
- இயேசு பிரானின் தாய் அன்னை மரியாள் ஆவார். பாதுகாவலர் பிதா ஜூசே ஆவார்.
- இயேசுப்பிரான் டிசெம்பர் மாதம் 24 ஆந்திகதி இரவு பிறந்ததாக கருதப்படுகின்றது.
- குடிசனக் கணக்கெடுப்பில் பங்குகொள்வதற்காக பெத்லஹேம் வந்தபோது மாட்டுத் தொழுவத்தில் குழந்தையேசு பிறந்ததாக கருதப்படுகின்றது.
- இயேசு பிரான் நிகழ்த்திய போதனைகள், அவர்கள் நடத்திய அற்புதங்கள், சட்டதிட்டங்களை மீறல் போன்ற காரணங்களுக்காக ஜூதர் தலைவர்கள் அவருக்கு எதிராகக் கிளர்ந்தனர்.
- அக்காரணங்களுக்காக இயேசு பிரான் சிலுவையில் தொங்கவிட்டுக் கொலைப்பட்டார்.
- பிரதி வருடமும் டிசெம்பர் 24 ஆந்திகதி இரவு தேவாலயங்களில் ஒன்று திரளும் கிறிஸ்தவர்கள் நத்தாரை அதாவது இயேசுவின் பிறப்பை கொண்டிடுவர்.
- அன்றைய தினத்தில் ஏழை எளியவர்களுக்கு உணவளிப்பர், ஆடையணி வழங்குவார், பரிசுகளும் வழங்குவர்.
- கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகைக் கால நேர காலத்துடன் ஆயத்தமாவார். வீடுகளை அலங்கரிப்பார், மாட்டுத் தொழுவங்கள் அமைப்பார், நத்தார் மரங்களை அலங்கரிப்பார்.
- நத்தார் தினத்தன்று புத்தாடை அணிவித்து அறுசுவை உணவு தயாரிப்பர்.
- நத்தார் வாழ்த்துமடல்களைப் பரிமாறிக் கொள்ளல் விசேடமான ஒரு நிகழ்வாகும். நத்தார் தாத்தா வரும்வரை சிறுவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பர்.

**<u>மேலுள்ள தகவலை நன்கு அவதானித்து வினாக்களுக்கு விடை தருக</u>**

1.இஸ்லாமியர்களின் பண்டிகை ஒன்றினை குறிப்பிடுக ?

2. ரமழான் பண்டிகை எவ்வாறு கொண்டாடப்படுகிறது ?

3. நோன்பு/உபவாசம் என்பது அரபு மொழியில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

4. ஸதகா, ஸகாத் வரி என்றால் என்ன?

5.நோன்பு நோற்ககூடியவர்கள் யாவர்?

6. "ஸகாத்துல் பித்ரா" எப்போது வழங்கப்படும் ?

7. "நத்தார்" என்ற போர்த்துகேயச் சொல்லின் பொருள் யாது?

8. நத்தார் பண்டிகை கொண்டாடுவோர் யாவர்? ஏன் கொண்டாடுகின்றனர்?

9. நத்தார் பண்டிகை எப்போது கொண்டாடப்படும்?

10. இப்பண்டிகைக்கு பயன்படுத்தும் அலங்கார வகை 4 குறிப்பிடுக?

11. நத்தார் காலத்தில் இடம்பெறும் நற்செயல்கள் 2 தருக?